**செய்தி வெளியீடு எண்: 477** **நாள்: 23.07.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (23.7.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை தொலைநோக்கு திட்டம் 2018–2030 ஒப்புதலுக்காக பரிசீலிக்கப்பட்டது. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் இத்தொலைநோக்கு திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

சென்டாய் கட்டமைப்பு, ஐக்கிய நாடுகளின் நீடித்த நிலையான வளர்ச்சித் திட்ட இலக்குகள்–2030, பருவநிலை மாற்றம் குறித்த பாரிஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிடும் முன்னுரிமை மற்றும் இலக்குகளையொட்டியும், தேசிய பேரிடர் மேலாண்மைத்திட்டம் 2016 மற்றும் பேரிடர் அபாயத்தணிப்பு குறித்து, ஆசிய நாடுகளின் அமைச்சர்கள் அளவிலான மாநாட்டில், மாண்புமிகு பாரதப் பிரதமர் வெளியிட்ட பத்து அம்ச செயல்திட்டம் ஆகியவற்றையொட்டியும் இத்தொலைநோக்குத் திட்டம் அமைந்துள்ளது.

இத்திட்டத்தின் அமைப்பானது, தமிழ்நாடு பற்றிய குறிப்பு, பேரிடர்களால் ஏற்படும் தாக்கம், பாதிப்புகள், அபாயங்கள் குறித்த மதிப்பீடு மற்றும் அதன் தணிப்புக்கான இயற்கையொட்டிய முறையான அணுகுமுறைகள், நிர்வாக கட்டமைப்பு, பேரிடர்களை எதிர்கொள்வதற்கான தயார் நிலை, இழப்பீடு வழங்குதல் மற்றும் புனர்வாழ்வு, அபாயங்களை தடுக்க மற்றும் தணிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், பாதிப்புகளை சீரமைக்கும் பொழுது ‘‘சிறப்பாக மீண்டும் உருவாக்குதல்’’, பேரிடர் அபாயத் தணிப்பை அடிப்படையாக கொண்டு மாநிலத்தின் இதர / வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் அத்திட்டங்களை நெறிப்படுத்துதல், நிதி ஆதாரங்கள், தொலைநோக்குத் திட்டம் போன்ற பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கிய திட்டமாக தயார்செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தின் முடிவில், தேசிய பேரிடர் மேலாண்மை சட்டம், 2005 பிரிவு 23(3)–ன்கீழ், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தால், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை தொலைநோக்கு திட்டம் 2018–2030 (Tamil Nadu State Disaster Management Perspective Plan 2018-2030)-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ். கிருஷ்ணன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் டாக்டர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை ஆணையர் திரு. ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., சுற்றுச்சூழல் துறை இயக்குநர் (பொறுப்பு) திரு.ஏ. உதயனன், இ.வ.ப., National Centre for Sustainable Coastal Management இயக்குநர் டாக்டர் ஆர். ரமேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**